
தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 12 இதழ் : 5 மார்ச் – 2016



"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"

(1 யோவான் 1 : 7)

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

## 15.03.2016 இல் பிறந்தநாள் காணும்

### சகோதரி **வஹிதா தேவதாஸ்** அவர்களை

வாழ்த்துகிறோம்....



சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். பீல் ஆதிவாசி மக்களைக் குறித்த தரிசனத்தை திருமணமாகி நான்காம் நாள் தேவனிடத்தில் இருந்து பெற்று குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்கள். கர்த்தர் இவர்களை பீல் மக்களுக்கு ஆவிக்குரிய தாயாக ஆசீர்வதித்திருக்கிறார்.

15.03.2016 அன்று பிறந்தநாள் (15.03.1963) காணும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை அந்நாளில் அன்புடன் வாழ்த்துகிறோம். இந்த ஆண்டிலும் கர்த்தர் அவர்களுக்கு நல்ல சுகத்தையும், பலத்தையும், பாதுகாப்பையும் கொடுத்து, பீல் மக்களுக்கும் பாரத தேசத்திற்கும் ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்த வாழ்த்தி ஜெபிக்கிறோம். நீங்களும் அந்த நாளில் ஜெபிக்க அன்புடன் கேட்கிறோம்.

சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ள : 09376018006

---

## 24.03.2016 அன்று பிறந்த நாள் காணும்

### சகோதரி. ஜாய் ஷெக்கினா அவர்களை

வாழ்த்துகிறோம்....



பேராயர் தேவதாஸ் மற்றும் சகோதரி அவர்களுக்கு தேவன் கொடுத்த அன்பு மகள் *ஜாய் ஷெக்கினா* பீல் ஆதிவாசி மக்களுக்காக மருத்துவப் பணி செய்ய தன்னை அர்ப்பணித்து ரஷ்யாவிலுள்ள Stavropol University யில் மருத்துவப்படிப்பின் ஆறாம் ஆண்டை நிறைவேற்றி வருகிறார்கள்.

24.03.2016 அன்று பிறந்த நாள் காணும் சகோதரி. ஜாய் ஷெக்கினா வை வாழ்த்துகிறோம். தேவன் தாமே இந்த ஆண்டிலும் தம்முடைய கிருபையினாலும் ஞானத்தினாலும் நிறைத்து நல்ல சுகத்தையும், பெலத்தையும் தந்து ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

***Shalom Pastors & Bhil Evangelists***
***Sharing Love Mission, Shalom Charity Mission &***
***Shalom Diocese in India.***

# உங்கள் சகோதரனிடமிருந்து



**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!**

**உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.** தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், ஆதரவுகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

கடந்த பிப்ரவரி மாதம் முழுவதும் தேவன் தாமே பணித்தளங்களில் மகத்தான கிரியைகளை நடப்பித்து உள்ளார். உபவாச கூடுகை, அலுவலக ஊழியர் கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்தார். மேலும் சிறப்பு பெண்கள் கூடுகை; சிறுவர் முகாம்களில் தேவநாமம் மகிமைப்பட்டது. தேவகிருபையால் 6 கிராம ஆலயங்களை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார்.

மேலும், 60 புதிய சுதேச ஊழியர் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 35 பேர்களுக்கு 1 மாத பயிற்சி கொடுக்கப்பட்டது. அடுத்த பயிற்சி ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த வெள்ளிவிழா ஆண்டில் 400 புதிய சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட பிரயாசப்பட்டு வருகிறோம், ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

பிப்ரவரி 16ம் தேதி முதல் மார்ச் 26ம் தேதி வரை 40 நாட்கள் அனைத்து ஷாலோம் சபைகளில் உபவாச ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது. சபை எழுப்புதலுக்காக; சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்பட கருத்தாக ஜெபிக்கிறார்கள். குருத்தோலை ஞாயிறு, பெரிய வியாழன், பெரிய வெள்ளி, ஈஸ்டர் திருநாள் ஆகிய நாட்களை சிறப்பாக ஆசரிக்க ஆயத்தமாகி வருகிறார்கள். மட்டுமல்ல அந்த வாரத்தில் பலநூறு குடும்பங்கள் ஞானஸ்நானம் பெற ஆயத்தப்பட்டு வருகிறார்கள்.

தேவ கிருபையால் 3 மாநிலங்களில் 30 இடங்களில் கிராம ஆலயம் கட்டப்பட்டு வருகிறது. தடையின்றி கட்டப்பட, தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். இந்த வெள்ளிவிழா ஆண்டில் 200 கிராம ஆலயங்கள் கட்டப்பட வாய்ப்புகள் உள்ளபடியால் கருத்தாய் ஜெபியுங்கள்.

எங்கள் குடும்பத்துக்காகவும், பணித்தள ஊழியர்களுக்காகவும், தூத்துக்குடி தலைமை அலுவலகம் மற்றும் முன்னேற்ற பணியாளர் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள். நாங்களும் உங்கள் யாவருக்காகவும் ஜெபித்து வருகிறோம்.

**"....இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார். ஆமென்." மத். 28:20**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# இயேசு கிறிஸ்துவின் இரத்தம்



சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

**"அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"** 1 யோவான் 1:7 வசனத்தின்படி பிதாவாகிய தேவனால் குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் அனுப்பப்பட்டு, பூமியிலுள்ள அனைத்து மனுக்குலத்திற்காக பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு தம் விலையேறப் பெற்ற திருஇரத்தத்தை கல்வாரி சிலுவையில் சிந்தினார். வேத வாக்கியங்களின்படி இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். 40 நாட்கள் தம்மை உயிர்த்தெழுந்த தேவனாக அநேகருக்கு தம்மை வெளிப்படுத்தி தம்மை அனுப்பின பிதாவின் சித்தம் நிறைவேற்றி பரத்துக்கு ஏறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். தேவனுடைய சபை விசுவாசிகளாகிய நாம் இவைகளைக் குறித்து அதிகம் தியானிக்கவும்; கிறிஸ்துவின் அன்பில் இன்னும் நிலைத்திருக்கவும்; 40 நாட்கள் உபவாசங்கள் மற்றும் கிறிஸ்து நமக்காக பாடுபட்ட வாரமாக குருத்தோலை ஞாயிறு, பெரிய வியாழன், பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த திருநாளாகிய ஈஸ்டர் பண்டிகைகளை ஆசரிப்பதின் மூலமாக அவைகளை அதிகம் நினைவு கூருகிறோம். இப்பொழுதும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை குறித்து நாம் சற்று தியானிப்போம்.

வேதம் சொல்கிறது, இரத்தத்தில் ஜீவன் உண்டு. மேலும் மனிதன் செய்த பாவங்கள் எல்லாவற்றிற்காகவும் பரிகாரம் இரத்தம் சிந்தப்பட வேண்டும். **"நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துத–லில்லாமல் மன்னிப்பு உண்டாகாது."** (எபி. 9 : 22) இந்த சத்தியத்தை பரிசுத்த வேதாகமம் மட்டுமல்ல அனைத்து வேதங்கள் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். ஆதியாகமம் 2ம் அதிகாரத்தில் ஆதாம், ஏவாள் பாவம் செய்து தேவனுடைய மகிமையை விட்டு விலகி தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்தபடியால் அத்தி இலைகளை தைத்துக் கொண்டு தங்கள் நிர்வாணத்தை மறைக்க முயன்றார்கள். ஆனால் காலையில் பறித்த இலைவாடி வதங்கி காய்ந்து கீழே விழுந்து விடும். ஆகவே தேவன் அன்றே ஒரு பிராணியை கொன்று இரத்தம் சிந்த வைத்து அதன் தோலை நிர்வாணத்தை மூடும் ஆடையாக அணிந்துக் கொள்ள கொடுத்தார். பாவம் செய்த மனிதன் மேல் தேவன் கொண்ட அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்துகிறது. இன்று கூட நம்முடைய நீதி கந்தையும் குப்பையுமாக உள்ளது. நம்முடைய சுய நீதியில் வாழ முடியாதபடியால் நமக்காக இரட்சிப்பின் உடையை தரும்படியாக சிலுவையில் தம் ஜீவனை ஈந்து ஈவாக தந்துள்ளார்.

பொதுவாக இந்த உலகில் ஆதிவாசி ஜனங்கள் ஆவி வணக்கம் உடையவர்கள். ஆடு, கோழி போன்ற பலிகளை செலுத்துவதின் மூலம் பரிகாரத்தை தேடுபவர்கள். அதற்காகத்தான் மஹாராஜா, குருக்கள், பூஜாரி, மந்திரவாதிகளை நாடி செல்வார்கள். இரட்சிக்கப்பட்ட நம் பீல் விசுவாசி குடும்பங்கள், ஊழியர்களிடத்தில் கேட்டுப் பாருங்கள். எத்தனை கோழிகள், ஆடுகளை

வெட்டி பலிகளை செலுத்தி வேதனைகளை அனுபவித்து உள்ளார்கள். கடந்த தலைமுறையில் நரபலிகளை, மனித இரத்தத்தைக்கூட சிந்த வைத்தார்கள். எதற்காக தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட, சாபங்கள் நீங்க, நோய்களிலிருந்து சுகம் பெற; பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக. ஆனால் பரிகாரம் எதுவும் கிடைக்காதபடி அலைந்து திரிவார்கள். ஏனெனில் மனிதனுக்கு மனிதனுடைய இரத்தம் தான் சிந்தப்பட வேண்டும். ஒரு மனிதனுக்காக இன்னொரு மனிதன் இரத்தம் சிந்தவே முடியாது. ஏனெனில் வேதம் சொல்லுகிறது நீதிமான் ஒருவனுமில்லை. அனைவரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களாக மாறி விட்டோம். தகப்பன் தன் பிள்ளைகளையோ, கணவன் தான் நேசிக்கிற மனைவியையோ, ஒருவனும் தன் சகோதரனையோ நண்பனையோ பாவ, சாப, நோய், பிசாசின் கட்டிலிருந்து விடுவித்து இரட்சிக்கவே முடியாது. எந்தவிதமான மதங்களும் விடுவித்து இரட்சிக்க முடியாது. ஆகவே பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுவை உலகத்திற்கு பரிசுத்த மானிடனாக பிறக்க வைத்து அவர் பரிசுத்த இரத்தத்தை மனுகுலத்தினை மீட்கும்படியாக சிந்த வைத்தார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எனக்காக சிந்தப்பட்டது என்று விசுவாசித்து ஒருவன் பாவங்களை அறிக்கையிட்டு; அந்த இரத்தத்தால் தன்னை கழுவ ஒப்புக்கொடுக்கும் போது, முதலாவதாக **“அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச்சுத்திகரிக்கும்”** 1யோவான் 1:7ன்படி பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறான். இரண்டாவதாக இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை நம் சரீரத்தில் பாயும்போது நாம் பரிபூரண சுகமடைகிறோம். என்னுடைய வாழ்வில் உலகத்து அன்பையும், சமாதானத்தையும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் என்னுடைய 18ம் வயதில் விஷத்தைக் குடித்து உயிரை மாய்த்துக்கொள்ள பிரயாசப்பட்டேன். தேவகிருபையால் ஜீவன் போகவில்லை. ஆனால் என் ஜீரண உறுப்புகள் பாதிக்கப்பட்டது. ஒருநாள் கோயம்புத்தூர் போதகர் ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் சபையில் பங்குபெற்று தேவ செய்தி கேட்கும்போது இந்த உலகத்தில் உள்ள எல்லா அன்பைவிட கல்வாரி அன்பு மிகப்பெரியது என்பதைக் கேட்டபோது முழங்காலில் நின்று அந்த கல்வாரி அன்பு தேவை என்று கண்ணீருடன் ஜெபித்த போது சிலுவை காட்சியை தேவன் தந்து கல்வாரியிலிருந்து ஒரு சொட்டு கிறிஸ்துவின் இரத்தம் என்மேல் விழுந்ததை கண்டேன். அவ்வளவுதான் என்னுடைய அனைத்து நோய்களும் சுகமாயின. இயேசு என் உள்ளத்தில் வந்தார். ஆவியானவர் தேவதாஸ் என்று பெயர்சொல்லி அழைத்து ஊழியக்காரனாக மாற்றினார். இன்று பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் அப்போஸ்தல ஊழியமாக ஷாலோம் ஊழியத்தை 36 வருடங்களுக்கு முன்பாக திருவுளம்பற்றினார். **தேவனுக்கே மகிமை!**

பாவங்கள், நோய்கள் மட்டுமல்ல நம்முடைய சாபங்களை இயேசுவின் இரத்தம் மாற்றி ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். கலாத்.3:13 வசனத்தின்படி நம் சாபங்களை ஆசீர்வாதங்களாக மாற்ற அவர் இரத்தம் சிந்தினார். ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. **“ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால்**

புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று". கலாத். 3:14

இயேசு கிறிஸ்து சிலுவையில் தம்முடைய இரத்தத்தை சிந்தி பிசாசின் கட்டுகளிலிருந்து, அந்தகாரத்திலிருந்து ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்து வந்தார். **"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்".** கொலோ. 2:14,15

பீல் ஆதிவாசி மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு மனம்திரும்பும் போது அவர்களை கட்டி வைத்த பிசாசுகள் நாங்கள் எங்கு போவோம்? இத்தனை வருடங்கள் சந்தோஷமாக பலிகளை ஏற்று இவர்களுடன் வாழ்ந்து வந்தோமே? இனி எங்களுக்கு ஆடு, கோழி பலிகள் தருவது யார் என்று அலரும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஜெயம் என அறிக்கையிட்டு கண்ணீருடன் இயேசுவினிடத்தில் ஜெபிக்கும்போது எல்லா பிசாசின் கட்டுகள் அறுபட்டு விடுதலை பெறுகிறார்கள். எல்லாவிதமான மந்திரங்கள், பில்லிசூனியங்கள் எல்லாம் இயேசுவின் இரத்தத்தால் ஓடி மறைந்து விடுகிறது. இன்று இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிறார்கள். அல்லேலூயா.

அடுத்ததாக யாத்திராகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கும் போது பிதாவாகிய தேவன் நம்முடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் 400 வருடங்கள் 4 தலைமுறையாக அடிமைத்தனத்தால் கட்டப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்கின்படி பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல தம்முடைய தாசன் மோசே மூலமாக இறங்கி வந்தார். பஸ்கா பண்டிகை நாளில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் அன்றைய தினமே உன்னதமான விடுதலையைப் பெற்று புறப்பட்டு வந்தார்கள். கர்த்தர் தாமே தம் சொந்த ஜனமாகிய இஸ்ரவேலரை மீட்ட பஸ்கா பண்டிகையை ஒவ்வொரு வருடமும் நினைவு கூர்ந்து அதாவது ஆட்டுக்குட்டியின் இரத்தம் சிந்தப்படுதலை ஆசரிக்க தேவன் நியமித்தார்.

**"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்".** (கலா. 4 : 5) பஸ்கா பண்டிகை நாளில் ஆட்டுக்குட்டியின் இரத்தமல்ல பஸ்கா ஆட்டுக்குட்டியான இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டு விலையேறப்பெற்ற நமக்கு தந்து பரம கானானாகிய பரலோக ராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக தேவன் நம்மை ஆசீர்வதித்துள்ளார். அந்த விலையேறப் பெற்ற கல்வாரி இரத்தத்தை நினைவுகூறும்படியாக அப்பத்தையும், திராட்ரசத்தையும் சபையாக தேவ ஜனமாக புசிக்கும்போதும், குடிக்கும்போதும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும் அவருடைய மரணத்தையும் நாம் நினைவு கூருகிறோம். தலைமுறை தலைமுறையாக வேதனைகளை அனுபவித்த பீல் விசுவாசிகள் பல்லாயிரம் பேர் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று சபை அங்கத்தினராக மாறி வருகிறார்கள். சபையில்

ஒவ்வொரு முறையும் இராப்போஜன விருந்து ஆராதனையில் பங்கு பெறும் போது உனக்காக பிட்கப்படும் இயேசுவின் சரீரம்; உனக்காக சிந்தப்படும் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் என்று அப்பம், திராட்சைரசத்தை பெறும்போது ஏங்கி ஏங்கி கண்ணீருடன் அழுது பெற்றுக் கொள்வார்கள். இயேசு அவர்களை நேசிப்பதையும்; விசுவாசிகளாக பீல் மக்கள் இயேசுவை நேசிப்பதை காணும் போது எங்கள் உள்ளம் உருகிவிடும்.

கடைசியாக வெளி. 7:9 **"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்."** என்ற வசனத்தின்படி ஒவ்வொரு ஜாதி கோத்திரத்தார் அனைவரும் கல்வாரி அன்பின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக பரலோகத்திற்கு வருவது பிதாவுடைய சித்தமாயிருக்கிறது. வெளி. 7:14 **"அப்பொழுது அவன் : இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்."** இயேசு கிறிஸ்துவின் கல்வாரி இரத்தத்தின் மூலமாகத்தான் பரலோகத்திற்கு வர முடியும்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக கிடைக்கும் இரட்சிப்பின் சுவிசேஷம் சகல ஜனங்களுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும். மத். 24:14 **"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்."** லூக். 24:47,48 **"அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்."**

இதை வாசிக்கிற அன்பானவர்களே, இந்த லெந்து நாட்களிலே நாமும் கூட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாக அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாக நாம் செயல்பட வேண்டும்.

## முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும். தொடர்புக்கு : 9698144522

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். ராகேஷ் பில்வாள்



## நாஹர்புரா, மத்தியப்பிரதேசம்

எனது பெயர் ராகேஷ் பில்வாள். மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள நாஹர்புரா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எங்கள் கிராமத்து ஜனங்கள் சாராயம் குடிப்பது, பீடி குடிப்பது, தம்பாக்கு போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்பவர்கள். மேலும் விக்கிரக ஆராதனை செய்கின்றவர்கள்.

இவர்களைப் போலவே பலவிதமான பாவங்களுக்கும் நான் அடிமையாக இருந்ததோடு விக்கிரக ஆராதனை செய்து வந்தேன். இந்த நிலையில் எனது சரீரத்தில் வியாதி ஏற்பட்டு ஒரு ஆண்டு காலமாக மிகவும் வேதனைப்பட்டு வந்தேன். எனது உடலிலுள்ள இரத்தம் மிகவும் குறைந்துவிட்டது. சுகத்திற்காக எவ்வளவோ மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் எங்களது கிராமத்தின் அருகே உள்ள மாத்தாப்பாடா என்ற கிராமத்தில் ஷாலோம் ஊழியத்தின் மூலம் இயேசுவின் கூட்டம் நடைபெறுவதைக் குறித்துக் கேள்விப்பட்டு, அங்கு சென்றால் சுகம் கிடைக்கும் என்று, அங்கு நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு ஊழியர் சகோ. கரக்கியா டாமோர் அவர்கள் எனக்காக ஜெபித்தபோது வேதன் ஜெபத்தைக் கேட்டு எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டோம். பின்பு தொடர்ந்து மாத்தாப்பாடா கிராம ஷாலோம் சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தேன். பின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை ஏற்படவே, நான் என்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஒரு மாத ஊழியர் பயிற்சி பெற்று எனது சொந்தக் கிராமமான நாஹர்புராவில் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். எங்களுக்கு மூன்று பிள்ளைகளை தேவன் தந்துள்ளார்.

எங்கள் கிராமம் முழுவதும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பாரத்துடனும் தரிசனத்துடனும் ஊழியம் செய்து வருகிறோம். எனக்காகவும், எனது குடும்பம் மற்றும் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : ***Pr. Sam Daniel,***
(Jesus My Belove Prayer Ministry Trust, Tirupur)

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 580 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 660 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 250 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

உங்கள் கரங்களில் கிடைக்கும் **அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்** ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **"அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு மார்ச் - 2016 -லிருந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்".**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

---

**''... சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது''. பிலி. 4:3.**

## போதகர். **Dr. ஜார்ஜ் இராபர்ட்** அவர்களின் ***பணித்தள வருகை அறிக்கை***

தேவகிருபையால் 2015ம் ஆண்டில் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக பீல் மக்கள் மத்தியில் நற்செய்தி கூட்டங்களில் செய்தியளிக்கவும், இராஜஸ்தானில் சாகுவா மற்றும் மத்தியப்பிரதேசத்தில் பிப்ளிபாடா கிராமங்களில் 2 கிராம ஆலயங்களை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். இந்த வருடமும் எங்கள் சபை மூலமாக **சகோ. ஜான் ஆஸ்டின்** அவர்கள் நிதி உதவியுடன் குஜராத்தில் தாகோத் மாவட்டத்தில் டோபேனோ என்கிற 3வது கிராம ஆலயத்தை 28.12.2015 அன்று ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார்.

**நானும் சகோ. ஜான் ஆஸ்டின்** மற்றும் **சகோ. சதீஷ்** மூவருமாக ஆலய பிரதிஷ்டையில் பங்கு பெற்றோம். **பேராயர் தேவதாஸ்** தலைமையில் ஜெபித்து பிரதிஷ்டை செய்தோம். எங்களை உற்சாகமாக வரவேற்று நடனமாடி துதித்து பாடின ஆராதனையை மறக்கவே முடியாது. ஜெபித்து அர்ப்பணிக்கும் போது கண்ணீருடன் ஒப்புக் கொடுத்த காட்சி எங்கள் உள்ளத்தை தொட்டது.

தேவனுடைய வார்த்தையை, சாட்சியை நாங்கள் பகிர்ந்த போது உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். தேவனுக்காக உற்சாகமாக காணிக்கை படைத்தார்கள். வயல்வெளியில் அமர்ந்து எளிய விருந்தை ஜனங்கள் சந்தோஷமாக சாப்பிட்டார்கள். சுதேச ஊழியர் **சோமா ஹத்திலா** அவருடைய சாட்சி மறக்க முடியாததாகும். நாம் யாருமே போய் ஊழியம் செய்ய முடியாத காடு, கிராமங்களில் பீல் சுதேச ஊழியர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு ஊழியம் செய்வது மிகப்பெரிய எழுப்புதலின் சாட்சியாகும்.

நாங்கள் பணித்தளத்திற்கு வந்தபோது 4வது கிராம ஆலயம் கட்டுவதற்கு ரூ. 2 இலட்சம் கொடுத்துள்ளோம். அழைப்பும், தரிசனமும் பெற்று பீல் ஆதிவாசிகள் மத்தியில் தேவ ராஜ்ஜியத்தை விரைந்து கட்டும் **பேராயர் தேவதாஸ்** அவர்களுக்கு தேவன் கொடுத்த ஷாலோம் ஊழியத்தை சபையார் அனைவரும் இணைந்து மாதந்தோறும் முடிந்த உதவியை சபை மூலமாக சேகரித்து அனுப்ப தீர்மானித்தோம். 10.01.2016 அன்று பிஷப் அவர்கள் எங்கள் சபைக்கு வந்து மிஷனெரி தரிசன செய்தி கொடுத்தார்கள்.

ஒவ்வொரு வளர்ந்து வரும் ஊழியத்திற்கு பின்னாக அந்த ஊழியருடைய தியாகம் தான் தெரிகிறது. முதல் தியாகமே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான். இந்த ஊழியமும் கிறிஸ்துவின் இரத்தத்திலேதான் கட்டப்பட்டுள்ளது. நன்மையை பேசும் இரத்தமாக இருக்கிறது இந்த ஊழியம். **பிஷப் தேவதாஸ்** அவர்களது துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுடைய தியாகம் தான் இந்த ஊழியத்தில் தெரிகிறது. இந்த ஊழியம் தரிசனத்தின் ஊழியமாக உள்ளது. நாம் நல்ல நிலத்தில் விதைத்தால் அறுவடை மிகுதியாக கிடைக்கும். அது போலத்தான் பிஷப் அவர்கள் ஒரு நல்ல நிலத்தில் கர்த்தருடைய வசனத்தை விதைத்து அநேக இலட்சக்கணக்கான அறுவடையைக் கண்டு வருகிறார்கள். நானே நேரிடையாக கண்டு வந்தபின் தான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன். அதற்காக நானே விரும்பி அவர்களிடம் ஒரு ஷாலோம் இரசீது புத்தகத்தைக் கேட்டு வாங்கி உள்ளேன். இதில் எங்களுடைய சபை மக்கள் மனப்பூர்வமாக ஆர்வமுள்ளவர்களாக மாதந்தோறும் ஷாலோம் ஊழியத்தைத் தாங்க முன்வந்துள்ளார்கள்.

அன்பானவர்களே, நீங்களும் சபையாக, சபை மூலமாக இன்னும் கட்டப்படவேண்டிய பல நூறு ஆலயங்களை கட்டிக் கொடுக்க முன்வாருங்கள். **தேவனுக்கே மகிமை** உண்டாவதாக!

போதகர். **Dr. ஜார்ஜ் இராபர்ட்** Praise Tower City Church, Chennai.

## போதகர். Dr. ஜார்ஜ் இராபர்ட் Praise Tower City Church, Chennai.
## கிராம ஆலயப் பிரதிஷ்டை (28.12.2015)


டோபேனோ கிராம ஆலய விசுவாசிகளுடன்


டோபேனோ கிராம ஆலய பிரதிஷ்டை வேளை


கலாச்சார வரவேற்பு


ஊழியர் குடும்பத்துடன்



ஆராதனை வேளை

## Praise Tower City Church, சென்னை – பேராயர் தேவதாஸ் அவர்களின் செய்திவேளை (10.01.2016)




# ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக கடலூர் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

## கல்லையன் குப்பம்






## கரைமேடு





## குறிஞ்சிப்பாடி







வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைக் குறித்ததான பாரத்தை ஷாலோம் பீல் மக்கள், விசுவாசிகள், ஊழியர்களுக்கு தேவன் கொடுத்தார். அதன்படி பீல் மக்கள் கொடுத்த நிதியுதவியின் மூலமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 22ம் தேதியன்று கடலூர் மக்களுக்கு பலசரக்குப் பொருட்கள் வாங்கி கொடுக்க தேவன் கிருபை செய்தார். இதில் மொத்தம் 230 குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டது. இதில் ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக 180 குடும்பங்களுக்கும், அன்பு பகிர்வு இயக்கத்தின் மூலமாக 50 குடும்பங்களுக்கும் பலசரக்கு பொருட்களை பேராயர். தேவதாஸ் அவர்களும், சகோ. டைட்டஸ் அவர்களும் வழங்கினார்கள். மேலும் இந்த நலத்திட்டங்களுக்கு ஆலோசனைகளைக் கொடுத்து உதவிய, சகோ. U.B. லயனல், Pr. எசேக்கியேல், Pr. சார்லஸ், சகோ. அந்தோணி முத்து ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## குஜராத் மாநிலம்

**Pr. வில்சன் சங்காடா — நகரேலா**

ரமிலாபேன் என்ற சகோதரி டைபாய்டு காய்ச்சலினால் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. வீர்சிங் ரட்டுவா — கில்தாரா**

ஆஷா என்ற சகோதரியின் மகள் வியாதிப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. மத்தூர் மெய்டா — தாவன்யாவட்**

ஜாமாபாய் என்ற சகோதரன் இடுப்பு வலியினால் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு மன்றாடினபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. முகேஷ் ரட்டுவா — கும்வாட்**

முகேஷ் என்ற சகோதரன் டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. குமன் டாமோர் — கரம்பா**

காந்திபேன் என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்தது. மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது கட்டி மறைந்து சுகம்பெற்றார்.

**Pr. கீர்த்தன் அமளியார் — காப்ரியா**

கைலாஷ் என்ற சகோதரன் சரீர பெலவீனத்தால் மிகவும் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. மடியா சங்காடா — தாசியா**

சுக்ரிபாய் என்ற சகோதரனின் கால் திடீரென வளைந்து விட்டது. ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. சாமுவேல் பார்கி — இட்டா**

கான்ஜிபாய் என்ற சகோதரன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இவருக்கு இயேசுவின் அன்பை எடுத்து கூறி பாரத்தோடு ஜெபித்தபோது குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலைப்பெற்றார்.

**Pr. அர்விந்த் டாமோர் — லிம்பாகேடி**

அர்விந்த்பாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று பாரத்தோடு ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. பரத் சாரேல் — ஹட்மத்**

சுரேக்காபேன் என்ற சகோதரி உதிரப்போக்கினால் பாதிக்கப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத விடுதலைப்பெற்றார்.

**Pr. ஹிமத் ராட்டுவா — பாஸ்கிரியா**

மத்தூரி என்ற சகோதரி கேன்சர் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். எவ்வளவோ மருந்து சாப்பிட்டும் மந்திரம் செய்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. துலா டாமோர் — பாஸ்கிரியா**

மீராபேன் என்ற சகோதரி டைபாய்டு காய்ச்சலினால் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. ரமேஷ் மச்சானியா ஹாஸ்வாடு**

ஒரு சகோதரி 6 வருடமாக வயிற்று பிரச்சினையினால் கஷ்டப்பட்டார். எவ்வளவோ மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் எந்த வித பலனுமில்லை. இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

கட்டுபாய் என்ற சகோதரன் குடிப்பழக்கத்தினால் வேதனைப்பட்டார். இவருக்கு இயேசுவை பற்றி கூறி பாரத்தோடு ஜெபித்தபோது குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலைப் பெற்றார்.

**Pr. ரமேஷ் புரியா கங்காதலை**

திலீப்பாய் என்ற சகோதரன் உடல் நலக்குறைவால் ஒரு நாள் திடீரென மரித்துவிட்டார். அனைவரும் அழுதுகொண்டே ஜெபித்தார்கள். 45 நிமிடம் கழித்து உயிர்பெற்று சுவாசிக்க ஆரம்பித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

ஜாப்டிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று பாாரத்தோடு ஜெபித்தபோது அற்புத விடுதலைப்பெற்றார்.

**Pr. ரமன் சிங்காடா ஜாமுகேடா**

ஒரு சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று பாரத்தோடு ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. ராஜ்மல் முனியா ஜீனி போர்டி**

குட்டிபாய் என்ற சகோதரனின் தாயார் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டதால் மூளை கலங்கி அலைந்து திரிந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. ராலுசிங் ஹத்திலா திக்கிடி**

தாவ்ரிபேன் என்ற சகோதரி நெஞ்சு வலியினால் கஷ்டப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. பால் முனியா கெய்டாவட்**

ராஜேஷ் என்ற சகோதரனின் மகள் மோனிகா கடந்த 8 தினமாக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்டார். எவ்வளவோ மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. ராகேஷ் பில்வாள் நகர்புரா**

மந்த்ராபேன் என்ற சகோதரி உதிரப்போக்கினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புதவிடுதலைப் பெற்றார்.

**Pr. ரமேஷ் புகா கோயாடாரியா**

சுமிதாபேன் என்ற சகோதரி கை மற்றும் கால் வலியினால் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. ரமேஷ் சந்திர சிங்காட் தாளாவாடா**

ஒரு சகோதரன் சரீர பெலவீனத்தால் மிகவும் கஷ்டப்பட்டான். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. தேஜா காமோர் வாட்லா**

சேம் என்ற சகோதரன் காய்ச்சலினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

ஹத்ரி என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. வாஹிங் நினாமா முனியகூட்டா**

கர்மா என்ற சகோதரி உதிரப்போக்கினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

சாரதா என்ற சகோதரி வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டார். இயேசுவின்நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. வீர்சிங் பாபோர் பிம்புரா**

லீலா என்ற சகோதரி சமாதானம் இல்லாமல் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சமாதானத்தைப் பெற்றுக்கொண்டார்.

**Pr. கல்சிங் பார்கி டெப்ரி**

ஹிரா என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவருக்காக ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

கும்பாபேன் என்ற சகோதரி சரீர வலியினால் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. கல்லா டாமோர் அம்பாபாடா**

ரகளிபேன் என்ற சகோதரி சரீர வலியினால் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. நீத்துசிங் கராசியா பாசிடோரா**

மஜீபேன் என்ற சகோதரி கை மற்றும் கால் வலியினால் கஷ்டப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம்பெற்றார்.

**Pr. சித்து சாரேல் அந்தோக்**

லீலா என்ற சகோதரியின் ஒரு வயது மகள் திடீரென வியாதிப்பட்டாள். மருத்துவம் பார்த்தும் மந்திரம் செய்தும் பலனில்லை. இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

பன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டார். இவருக்காக அனைவரும் பாரத்தோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

ஜித்தரிபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டார். இயேசுவின் நாமத்தில் விசுவாசத்தோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

**Pr. பவுல் பார்கி பில்குவா**

சாம்பாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டார். இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr. சித்து சாரேல் அந்தோக்**

அந்தகு என்ற சகோதரியின் இரண்டாவது மகள் காய்ச்சலினால் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. மோகன் காமோல் துங்கிரிபாடா**

சபிதாபேன் என்ற சகோதரி வியாதிப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**கருத்தப்பிள்ளையூர் சி.எஸ்.ஐ ஆலயம் – 24.01.2016**

தேவனுடைய பெரிதான கிருபையினால் தூய தோமா சி.எஸ்.ஐ ஆலயத்தில் ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொள்ளவும் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளித்த சபை போதகர், உபதேசியார் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கத்தோலிக்க நண்பர்கள் ஜெப ஐக்கியம் – 31.01.2016**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கத்தோலிக்க நண்பர்கள் ஜெப ஐக்கியத்தில் பங்கு பெற்று ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொள்ள வாய்ப்பளித்து, 5 மிஷனெரி ஊழியர்களைத் தாங்க முன்வந்ததற்காக கத்தோலிக்க நண்பர்கள் ஜெப ஐக்கிய பொறுப்பாளர்கள் மற்றும் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உபவாச ஜெபம், மேல சிவந்திபுரம் – 06.02.2016, திருநெல்வேலி**

தேவனுடைய பெரிதான கிருபையால் நம் ஷாலோம் ஊழியர்கள் **உபவாச ஜெபத்தை** நடத்தினார்கள். இதற்கு மிகவும் உதவியாக இருந்து இந்த வாய்ப்பை நமக்குத் தந்த சபை உபதேசியார் ஜாண் அவர்களுக்கும். சேகரகுரு மதுரம் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருப்பதியாபுரம் சி.எஸ்.ஐ ஆலயம் – 07.02.2016, திருநெல்வேலி**

தேவனுடைய பெரிதான கிருபையால் நம் ஷாலோம் ஊழியர்கள் **ஞாயிறு ஆராதனையில்** ஷாலோம் ஊழியத்தை பகிரந்து கொண்டார்கள். இதற்கு மிகவும் உதவியாக இருந்து இந்த வாய்ப்பை நமக்குத் தந்த சபை உபதேசியார் செல்வின் ஜெபமணி அவர்களுக்கும். சேகரகுரு அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தூய மீட்பர் லுத்தரன் ஆலயம் – 07.02.2016, மணக்கரை**

தேவனுடைய பெரிதான கிருபையால் நம் ஷாலோம் ஊழியர்கள் **ஞாயிறு ஆராதனையில்** ஷாலோம் ஊழியத்தை பகிரந்து கொண்டார்கள். இதற்கு மிகவும் உதவியாக இருந்து இந்த வாய்ப்பை நமக்குத் தந்த சபை குருவானவர் அலெக்சாண்டர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம்–13.02.2016, மார்த்தாண்டம்**

தேவனுடைய பெரிதான கிருபையால் மார்த்தாண்டம் கிளை அலுவலகத்தில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. இந்தக் கூடுகையில் **சகோ. செல்வதுரை** மற்றும் **சகோ. கிங்பெர்ட்** ஆகிய இருவரும் பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தினார்கள். மாணவர்களுக்கு ஆலோசனை மற்றும் தேவசெய்தி **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் கொடுத்தார்கள்.

**ஞாயிறு துதி ஆராதனை – 14.02.2016 – கூவரவிளை**

தேவனுடைய பெரிதான கிருபையால் கூவரவிளை CSI தேவாலயத்தில் நடைபெற்ற துதி ஆராதனையில் நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் ஊழியர்கள் கலந்துக் கொண்டனர். இதில் பாடல் மற்றும் ஆராதனை வேளையை **சகோ. செல்வதுரை** அவர்கள் ஏறெடுத்ததோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்துக் கொண்டார்கள். அதன்பின்னர் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அதன்பின்னர் ஆராதனையைத் தொடர்ந்து வாலிபர்களுக்கும், சிறுவர்களுக்கும் நடைபெற்ற சிறப்புக் கூடுகைகளை நமது ஷாலோம் நாகர்கோவில் கிளை அலுவலக ஊழியர்கள் சிறப்பாக நடத்தினார்கள். இந்த ஆலயத்தில் நம் ஷாலோம் ஊழியங்களை ஏற்று பயன்படுத்திய **Rev. ஜெபசிங்** அவர்களுக்காகவும் சபையாருக்காகவும் ஆண்டவரைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**வாலிபர்களுக்கான சிறப்பு ஜெபம் – 14.02.2016 – விரிகோடு**

தேவனுடைய பெரிதான கிருபையால் விரிகோடு CSI தேவாலயத்தில் நடைபெற்ற வாலிபர்களுக்கான சிறப்பு ஜெபத்தில் பாடல் மற்றும் ஆராதனைவேளையை **சகோ. செல்வதுரை** அவர்கள் ஏறெடுத்தார்கள் மேலும் வாலிபர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் தேவனுடைய வார்த்தையை வழங்கி, சிறப்பு ஜெபத்தினை **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் ஏறெடுத்தார்கள். இந்த ஆலயத்தில் நம் ஷாலோம் ஊழியங்களை ஏற்று பயன்படுத்திய **Rev. சாம் பிரின்ஸ்** அவர்களுக்காகவும் சபையாருக்காகவும் ஆண்டவரைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**சிறப்பு மாலை ஜெபம் – 14.02.2016 – பயணம்**

தேவனுடைய பெரிதான கிருபையால் பயணம் CSI தேவாலயத்தில் நடைபெற்ற மாலை நேர சிறப்பு ஜெபத்தில் பாடல் மற்றும் ஆராதனைவேளையை **சகோ. செல்வதுரை** அவர்கள் ஏறெடுத்தார்கள். தேவனுடைய வார்த்தையை **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் வழங்கினார்கள். இந்த ஆலயத்தில் நம் ஷாலோம் ஊழியங்களை ஏற்று பயன்படுத்திய **Rev. சதி லால்** அவர்களுக்காகவும் சபையாருக்காகவும் ஆண்டவரைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு துதி ஆராதனை – 14.02.2016 – பிரம்மதேசம்**

தேவனுடைய பெரிதான கிருபையால் பிரம்மதேசம் CSI தேவாலயத்தில் நடைபெற்ற துதி ஆராதனையில் நமது ஷாலோம் ஊழயத்தின் சார்பில் ஊழியர்கள் கலந்துக் கொண்டனர். இதில் பாடல் மற்றும் ஆராதனை வேளையை **சகோ. ஜாண்** அவர்கள் ஏறெடுத்ததோடு, தேவ செய்தியையும் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து ஷாலோம் ஊழியங்களைக் குறித்து **சகோ. டேவிட்** அவர்கள் பகிர்ந்துக் கொண்டார்கள். இந்த ஆலயத்தில் நம் ஷாலோம் ஊழியங்களை ஏற்று பயன்படுத்திய சபை போதகர் **Rev. T.E.V. சாமுவேல்** அவர்களுக்காகவும், பணியாளர் **சகோ. I. ஜோசுவா செல்லையா** மற்றும் சபையாருக்காகவும் ஆண்டவரைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி ஜனவரி - 2016

தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் திருமண்டலத்தில் தேவன் தந்துள்ள 600க்கும் மேற்பட்ட திருச்சபைகளில் சுமார் 30ஆயிரம் சிறு பிள்ளைகளுக்கென்று ஞாயிறு வேதாகம பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் சுமார் 400க்கும் அதிகமான சிறுவர் ஊழிய ஆசிரியர்கள் சேவை புரிந்து வருகிறார்கள். இவர்களுக்கென்று இந்த 2016ம் வருடம் ஜனவரி மாதத்தில் ஆண்கள், பெண்கள் தனித்தனியே 2 பிரிவுகளாக முறையே 23,24 ஆகிய தேதிகளிலும், 30,31 ஆகிய தேதிகளிலும் தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. இதில் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் மிகவும் உற்சாகமாய் வந்து பங்கு பெற்றார்கள்.

இவர்களுக்கு பாடல், ஆராதனை, விசேஷ செய்தி மற்றும் அபிநயப்பாடல்கள் மற்றும் ஞாயிறு பள்ளி நடத்துவது எப்படி? என்றும், பிள்ளைகளை இரட்சிப்பிற்குள் நடத்துவது எப்படி? என்றும் Attendance Register Maintenance மற்றும் காணிக்கை பற்றிய ஒழுங்குகள் என்று பல கோணங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. மட்டுமல்லாமல் 6 மாதத்திற்கு 26 வேதபாடங்கள் தயாரிக்கப்பட்டு, அந்தப் பாடங்களை எப்படி நடத்துவது? என்றும் மனப்பாட வசனங்கள் கற்றுக் கொடுப்பது எப்படி? என்றும் பயிற்சி கொடுக்கப்பட்டது. உபகரணங்கள் (பொருட்கள்) மூலமாகவும், படம் மூலமாகவும், பொம்மைகள் மூலமாகவும், பல குரல் மூலமாகவும் கதைகள் சொல்லி பிள்ளைகளின் கவனத்தை சிதறவிடாமல் நடத்துவது பற்றியும் பயிற்சிக் குழு ஊழியர்கள் மற்றும் ஞாயிறு பள்ளி கண்காணிப்பாளர்கள் மிகவும் சிற்பபாக நடத்தினார்கள்.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 2 நாட்களும் விசேஷ செய்தி அளித்து, ஆத்தும பாரத்திற்குள்ளும் அபிஷேகத்திற்குள்ளும் நடத்தினார்கள். அனைவரும் தங்களை ஒப்புக் கொடுத்து, அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டு, தரிசனங்களையும் பெற்றார்கள். தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்யும்படியாய் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

## ஷாலோம் சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள்

தேவனுடைய பெரிதான கிருபையால் 2016ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் 4 பகுதிகளில் சிறுவர் முகாம் சிறப்பாக நடைபெற்றது. இராஜஸ்தானில் தாடுகா, பேடவ் மற்றும் சாகுவா ஆகிய 3 பகுதிகளிலுள்ள சிறுவர்களுக்கென்று 20,21,22 ஆகிய தேதிகளில் விசேஷ முகாம்கள் நடத்தப்பட்டது. மேலும் மத்தியப்பிரதேசத்தில் சோக்வாடா பகுதி சிறுவர்களுக்கென்று 07.02.2016 அன்று ஷாலோம் தோரண்யா சபையில் வைத்து நடைபெற்றது. இம்முகாம்களில் சுமார் 520 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவாசீர்வாதம் பெற்றார்கள். இம் முகாம்களை ஞாயிறு பள்ளி கண்காணிப்பாளர்களும் அந்தப் பகுதியிலுள்ள ஞாயிறு பள்ளி ஆசிரியர்களும் இணைந்து தாங்களே பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள். மாதிரியாயிரு என்ற தலைப்பின் கீழ் இவர்களே பிள்ளைகளுக்கு பாடல்கள், கதைகள், நாடகம் மூலம் நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட முகாம்கள் மாதந்தோறும் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படவுள்ளது. இதற்காக விசேஷமாக ஜெபித்துக்கொள்ளுங்கள். இந்த முகாம்களில் கலந்து கொண்ட அனைத்து சிறுபிள்ளைகளுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. சிறு பிள்ளைகள் உற்சாகமாக கலந்து கொண்டு இயேசுவை ஏற்றுக் கொண்டு, அபிஷேகம் பெற்று இயேசுவுக்காய் வாழ தங்களை அர்ப்பணித்தார்கள். தேவனுக்கே மகிமை!

## ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி (ஜனவரி - 2016)
## (குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம்)



பாடல் வேளை



ஆராதனை வேளை




தேவ செய்தி – சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



வழங்கப்பட்ட பயிற்சி புத்தகங்கள்





பயிற்சி பெறும்படியாக கூடியிருந்த ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள்

## சொக்குவாடா (ம.பி.) பகுதி சிறுவர்களுக்கென்று நடத்தப்பட்ட சிறப்பு முகாம் -2016



பாடல் & ஆராதனை வேளை



கூடியிருந்த சிறுவர்கள்



## ஷாலோம் கிராம ஆலயம்

# அம்பா மத்தியப்பிரதேசம்

அம்பா என்ற கிராமம் மத்தியப்பிரதேசத்திலுள்ள அலிராஜ்பூர் மாவட்டத்திலுள்ள சூண்டுவா தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. அஜய்சிங் தோமர் சாராயம்,பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக இருந்தார். இவருடைய தாயார் ரேஸ்மாபேன் அவர்கள் வியாதிப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு அநேக மந்திரம், மருத்துவம் பார்த்தும் முடியாத சூழ்நிலையில் மரிக்கும் தருவாயில் இருந்தபோது ஷாலோம் ஊழியர் காகடாராட்டுவா அவர்கள் இயேசுவைப்பற்றிக் கூறி தாயாருக்காக ஜெபித்த போது தேவன் தாயாருக்கு பரிபூரண சுகத்தைக் கட்டளையிட்டார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தன் வீட்டில் ஊழியரைக் கொண்டு கூட்டம் நடத்தி வந்தார். பின்பு அஜய்சிங் தோமர் ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது 25 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள்.

இவர் காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் சகோ. ஜெயக்குமார் (தூத்துக்குடி) அவர்களால் கொடுக்கப்பட்ட நிதியுதவியால் புதிய ஆலயம் கட்டப்பட்டு தேவநாம மகிமைக்காக 18.01.2016 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.




## ஷாலோம் கிராம ஆலயம்

# பளாஸ்டோர் மத்தியப்பிரதேசம்

பளாஸ்டோர்ஷஎன்ற கிராமம் மத்தியப்பிரதேச மாநிலம் ஜாபுவா மாவட்டம் தாந்லா தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் திருடுவதும், கொள்ளையடிப்பதும் இவர்களது தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தவர் தான் ஊழியர் ராக்கேஷ் பேடி. இவருக்கு திடீரென்று சிறுநீர் மற்றும் மலம் கழிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இந்தச் சூழ்நிலையில் இருக்கும் போது ஷாலோம் ஊழியர் மன்னு பாபோர் அவர்கள் இவருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்த போது தேவன் இவருக்கு பூரணமான சுகத்தைக் கட்டளையிட்டார். இந்த அற்புதத்தைக் கண்டு இவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழியப்பயிற்சி பெற்று ஊழியம் செய்ய ஆரம்பித்தார். ரவ்சிங்பாய் வீட்டில் வைத்து 5 பேருடன் கூட்டம் நடத்தினார்கள். தற்போது 35 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

இந்த சபையின் மூப்பர்கள் காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில் பாண்டிச்சேரியைச் சேர்ந்த சகோ. சுரேஷ் கிறிஸ்டியன் எல்லிஸ் (அயர்லாந்து) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலமாக புதிய ஆலயம் கட்டப்பட்டு, 03.02.2016 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுக்க Dr. ராஜேந்திரன் (திருச்சி) அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.






## ஷாலோம் கிராம ஆலயம்

# தாவடியா குஜராத்

தாவடியா என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்தில் ஜாலோத் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் சாராயம் காய்ச்சும் தொழிலையும், விக்கிரக ஆராதனை செய்தும் வாழ்ந்து வந்தார்கள். ஊழியர் லாலுபாய் இயேசுவை அறிவதற்கு முன்பு சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவத்திற்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவர் பூஜாரியாகவும் இருந்தார். இவரது தாத்தாவும் ஒரு பூஜாரி. இருந்தபோதிலும் இவருக்கு வியாதி வந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது எதுவும் சுகமளிக்கவில்லை. அப்போது ஊழியர் கோர்சிங் டாமோர் அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். இதனால் இவர் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார். சகோ. லாலுபாய் பாரியா அவர்கள் ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு தன்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத பயிற்சி பெற்று தொடர்ந்து கூட்டத்தை நடத்த ஆரம்பித்தார். தற்போது 20 குடும்பங்கள் சபையில் ஆராதித்து வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் ஊழியர் லாலுபாய் அவர்கள் காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில் துபாயில் பணிபுரியும் கன்னியாகுமரியைச் சேர்ந்த சகோ. ஜாலின் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் புதிய ஆலயம் கட்டப்பட்டு தேவ 05.02.2016 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுக்க Dr. ராஜேந்திரன் (திருச்சி) அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.




## ஷாலோம் கிராம ஆலயம்

# காளிமகுடி குஜராத்

காளிமகுடி என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்தில் ஜாலோத் தாலுகாவில் உள்ளது. இந்தக் கிராமத்தில் விக்கிரக ஆராதனை செய்தும், சாராயம் காய்ச்சியும், திருடியும் தொழில் செய்து வாழ்பவர்கள். இந்தச் சூழ்நிலையில் ஊழியர் தினேஷ் நினாமா அவர்களின் தந்தை கஸ்னா பாய் நினாமா அவர்கள் பில்லிசூனியக் கட்டினால் வியாதிப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்தச் சூழ்நிலையில் ஷாலோம் ஊழியர் ஹவ்சிங் சங்காடா அவர்கள் இவரிடம் இயேசுவைப் பற்றிக் கூறி இவருடைய தந்தைக்காக ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு தன்னை ஊழியத்திற்காக அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத பயிற்சி பெற்று தனது சொந்தக் கிராமத்தில் 7 குடும்பங்களுடன் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது 30 குடும்பங்களுடன் இவர் சபையில் ஆராதனை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் இவர் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம்கொடுக்கப்பட்ட நிதியுதவியால் ஒரு புதிய ஆலயம் கட்டப்பட்டு, 06.02.2016 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுக்க Dr. ராஜேந்திரன் (திருச்சி) அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## புதிய சுதேச ஊழியர்கள் மூன்று நாள் பயிற்சி 28-30, ஜனவரி - 2016


புதிய சுதேச ஊழியர் குடும்பங்கள்


ஆராதனை வேளை


பயிற்சியளிக்கும் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



பயிற்சியளிக்கும் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்

## சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கான விசேஷக் கூடுகைகள்


பாடல் வேளை


ஆராதனை வேளை


தேவ செய்தி – சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


ஜெப வேளை

## புதிய சுதேச ஊழியர்கள் மூன்று நாள் பயிற்சி ஜனவரி - 2016

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்தில் புதிய ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, Orientation நடத்தி, பின்பு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த வருடமும் 72 புதிய ஊழியர்கள் குடும்பத்திற்கு ஜனவரி 28ம் தேதி முதல் 30ம் தேதி வரை 3 நாட்கள் Orientation Program நடத்தப்பட்டது. இதில் **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் **"இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம்"** இரட்சிப்பு, பரிசுத்தம் பற்றியும், பயிற்சி குழு ஊழியர்கள் 3 பேர் மற்ற பாடங்களையும் கற்றுக் கொடுத்தனர். இரவில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஆத்துமபாரத்தைப் பெற்றனர். ஜெபவேளையில் ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டனர். தேவன் அவர்களை ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தினார். இறுதியாக **பேராயர். தேவதாஸ்** அவர்களும் தலைமை ஊழியர்களும் இணைந்து இவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தினார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 60 குடும்பத்தாருக்கும், பிப்ரவரி மாதம் 8ம் தேதியிலிருந்து ஒரு மாத வேதாகம பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பின் இவர்கள் சொந்த கிராமங்களுக்குச் சென்று புதிய ஷாலோம் சபைகளை ஸ்தாபிக்க இருக்கிறார்கள். **தேவனுக்கே மகிமை!**

## சுதேச ஊழியர்களின் மனைவி-மார்களுக்கான விசேஷக் கூடுகைகள் (குஜராத், ம.பி. மற்றும் இராஜஸ்தான்)

தேவனுடைய அளவில்லாத இரக்கத்தின்படியே, 2016ம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் தேவன் நமக்கு தந்திருக்கிற பீல் போதகர்கள், சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூட்டங்கள் ஜனவரி மாதம் 18,22,26,27 ஆகிய தேதிகளில் முறையே குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் – 1 மற்றும் 2 பகுதியில் உள்ளவர்களுக்குத் தாகோத், கோய்க்கா, செவனியா பகுதியில் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் **"தேவன் தம்முடைய ஊழியர்களை அக்கினி ஜுவாலைகளாக மாற்றுவார்"** என்ற தலைப்பின் அடிப்படையில் தேவ செய்தியளித்தார்கள். பாடல் ஆராதனை வேளையை **சகோ. ப்ராங்க்ளின்** அவர்களும், ஜெபக்குறிப்புகளைப் பெண்கள் குழுவினரும் நடத்தினார்கள். அனைவரும் ஆவியில் நிரம்பி அக்கினி அபிஷேகத்தைப் பெற்று, இந்த ஆண்டிலும் தேவனுக்காக வைராக்கியமாக, உற்சாகமாக ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்தார்கள். இவர்கள் தங்கள் சபைகளில் மாதந்தோறும் பெண்கள் கூட்டமும், அந்நிய பாஷை ஜெபமும் நடத்துகிறார்கள். கூட்டங்களை ஆசீர்வதித்த தேவனுக்கே மகிமையுண்டாவதாக!



# ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

மிஷனெரி முன்னோடிகள்

**ஆஸ்வால்ட் ஜே.ஸ்மித்** கனடா நாட்டின் ஒன்டாரியோ மாநிலத்தில் உள்ள ஓடிஸ்ஸாவில் 1889–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8–ஆம் தேதி பிறந்தார். இவரது தந்தை ஒரு தந்தி அலுவலர். இளமையிலேயே ஜெபிப்பதிலும் ஆலயத்திற்குச் செல்வதிலும் ஆர்வம் காட்டினார். என்றாலும் இரட்சிப்பு என்றால் என்னவென்பதை இவர் அறியவில்லை. குடிகாரன் ரிச்சர்ட்சன் மற்றும் துன்மார்க்கனான ஒரு அனாதை ஆகியோர் இயேசுவால் இரட்சிக்கப்பட்டதை அறிந்ததன் மூலம் தானும் இரட்சிப்பின் அனுபவம் பெற வாஞ்சித்தார்.

தனது 16–வது வயதில் சுவிசேஷகர் டோடி நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்டார். அவர் அடிக்கடி கூறிய ஏசாயா 53 : 5–ஆம் வசனம் இவரைத் தொட்டது. தனது உள்ளத்தில் கிறிஸ்து வந்ததையும் தான் மறுபடியும் பிறந்ததையும் உணர்ந்தார். தானும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையில் வேதாகமப் பள்ளியில் சேர்ந்தார். 1908–ஆம் ஆண்டு செவர்ன் நகரில் முதன் முறைபிரசங்கித்தார்.

1918–ல் ஊழிய வாஞ்சையுள்ள பில்லிங்ஸ் என்ற பெண்மணியை மணந்தார். முதலாவது பிரஸ் பைட்டிரியன் சபை ஆலயத்திலும் பின்னர் டேல் ஆலயத்திலும் போதகராகப் பணிபுரிந்தார். பின்னர் கனடாவில் இவர் நிறுவிய பீப்பிள்ஸ் சபை ஆலயத்தில் பணியாற்றினார். 1929–ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள ரஷ்ய மிஷனெரிப் பணித்தளங்களில் ஊழியம் செய்தார். இவரது முயற்சியால் ஸ்பெயின் மற்றும் ரீகாவில் வேதாகமப் பள்ளிகளும் நிறுவப்பட்டன. பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கு மிஷனெரிகள் அனுப்பப்பட்டனர். நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற இயேசுக் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து 1924 முதல் 1970 வரை உலகின் 70 நாடுகளில் மிஷனெரி ஊழியம் செய்துள்ளார்.

மிஷனெரிகளை உருவாக்குவதில் இவருக்கு இணையாக எவருமில்லையென பில்லிகிரஹாம் இவரைப் பற்றி கூறுகிறார். இவருடைய முயற்சியால் 450 மிஷனெரிகள் உலகெங்கும் அனுப்பப்பட்டனர். ஆண்டொன்றுக்கு 5 லட்சம் டாலர்கள் இதற்கென செலவிடப்பட்டது.

இவரால் எழுதப்பட்ட 35 புத்தகங்கள் 100 மொழிகளில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. சுமார் 1200 சுவிசேஷப் பாடல்கள் இயற்றியுள்ளார். பீப்பிள்ஸ் மேகசின் என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக 50 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சுவிசேஷத்திற்கென தன்னையே அர்ப்பணித்த இவர் உண்மையிலேயே மறக்க முடியாத மாமனிதர் ஆவார்.

# மார்ச் மாத ஷாலோம் உபவாச ஜெபங்கள்

| நாள் & நேரம் | இடம் |
| --- | --- |
| **12.03.2016,** *சனிக்கிழமை*<br>நேரம் : *மாலை 5.00 மணிக்கு* | M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்**<br>தொடர்புக்கு:<br>**சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,<br>**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405<br>**சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820 |
| **19.03.2016,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | எபனேசர் பிளாசா, பரமா தெரு, WCC ஜங்சன்,<br>**நாகர்கோவில்.**<br>தொடர்புக்கு: Cell : 9688144522 |
| **26.03.2016,** *சனிக்கிழமை*<br>நேரம் : *காலை 10.00 மணி முதல் 1 மணி வரை* | No. 102 - 2வது மெயின் ரோடு,<br>சத்யா நகர், பாடி, **சென்னை**<br>தொடர்புக்கு:<br>**சகோ. ஜாண் ஜெயசிங்,** Cell : 9698244577 |

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.03.2016 (செவ்வாய் கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## ஷாலோம் ஜெபக்குழு

பிரியமானவர்களே, கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக ஜெபிக்கும் அநேக ஜெபக் குழுக்களை தேவன் தந்துள்ளார். இந்த ஜெபக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இதை வாசிக்கின்ற உங்களையும் மாதம் ஒரு முறை கூடி **ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்திய தேசத்திற்காகவும்** ஜெபிக்கும்படியாக தேவன் ஏவுவாராகில் உங்கள் பகுதியில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்பி வைக்கிறோம். தேவன்தாமே ஜெபத்தின் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்புக்கு : 9698044522, 0461 – 2375468, 2377737

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 322க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் **சகோதரி ஷெக்கினா** அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் பணித்தள பார்வையிடல்**

- மார்ச் 5, 6 ஆகிய தேதிகளில் குடும்பமாக பணித்தளத்திற்கு செல்லவிருக்கும் திருநெல்வேலியைச் சேர்ந்த **சகோ. சுதன்** அவர்களுக்காக ஜெபியுங்கள்.
- மார்ச் 18, 19, 20 ஆகிய தேதிகளில் பணித்தளத்திற்கு செல்லவிருக்கும் திருநெல்வேலியைச் சேர்ந்த **சகோ.ஜெயராஜ், சகோ. பிச்சை ஜெபராஜ்** அவர்களுக்காக ஜெபியுங்கள்.
- அவர்களது பிரயாணங்களை கர்த்தர் பொறுப்பெடுத்துக் கொள்ளும்படியாகவும்,
- பணித்தளத்தில் உள்ள புதிதாக கட்டியிருக்கும் ஆலய பிரதிஷ்டையில் இவர்கள் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**40 நாள் உபவாச ஜெபம்**

- நமது ஷாலோம் பணித்தளத்தில் பிப்ரவரி 10ம் தேதி முதல் 40 நாள் உபவாச ஜெபம் நடைபெறவுள்ளது. இந்த உபவாச ஜெபத்தை அனுசரிக்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். இந்த நாட்களில் தேவன் அவர்களுக்கு நல்ல கிருபையையும் பாதுகாவலையும் பெலத்தையும் தர ஜெபியுங்கள்.
- உபவாச ஜெபங்களில் கர்த்தர் பலத்த கிரியை செய்யும்படியாகவும், இந்த நாட்கள் பீல் மக்களுக்கும், ஊழியர்களுக்கும் ஒரு எழுப்புதலைக் கொடுக்கக்கூடியதாக அமையவும் ஜெபியுங்கள்.

**தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக**

- மார்ச் மாதங்களில் நடக்க இருக்கிறதான 10, 12 வகுப்பு படிக்கும் நமது பீல் பிள்ளைகளுக்காகவும், அவர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தையும், தேர்வு நாட்களில் நல்ல சுகத்தையும் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**விடுமுறை வேதாகம பள்ளி (V.B.S - 2016)**

- மே மாதங்களில் நடக்கவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளிக்காகவும், (V.B.S) இதில் பீல் சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும்படியாகவும். இயேசுதான் மெய்யான தெய்வம் என்பதை அறிந்துக் கொள்ளும்படியாகவும், எல்லா சிறுவர்களும் இதில் கலந்துக் கொள்ளும்படியாகவும் ஜெபியுங்கள்.




***பிரியமானவர்களே!*** *நமது ஷாலோமின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கீழ்க்காணும் தொலைக்காட்சி சேனல்களிலும் கண்டு தேவனைத் துதியுங்கள்!*

| | |
|---|---|
| ஹெவன் Heaven tv | நாகர்கோவில் – ஞாயிற்றுக்கிழமை<br>மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| **ARK T.V.** | நாகர்கோவில் – திங்கள் கிழமை<br>மாலை 9.30 மணி முதல் 10.00 வரை |
| ஹெவன் Heaven tv India | சென்னை – ஞாயிற்றுக்கிழமை<br>மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| HOPE | தூத்துக்குடி – ஞாயிற்றுக்கிழமை<br>மாலை 5.00 மணி முதல் 5.30 வரை |
| **CROSS T.V.** | தூத்துக்குடி – திங்கள் கிழமை<br>மாலை 7.30 மணி முதல் 8.00 வரை |

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **"வருமான வரிவிலக்குச் சான்று" (80G)** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

# சிறுவர் வேதாகம வகுப்பு – 2016 CBC (VBS)

பிரியமானவர்களே, நமது ஷாலோம் கிராம சபைகளிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களைத் தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவைத் தந்து வருவதால், அவர்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்தச் சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு தோறும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேதப் பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2015 ஆம் ஆண்டில் "நிலைத்திரு" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட CBC வகுப்புகளில் 30,000க்கும் அதிகமான சிறுவர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் "மாதிரியாயிரு" என்ற தலைப்பில் 600 கிராமங்களில் 40,000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு CBC நடத்த ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கானப் பயிற்சிக் கையேடுகள், 40,000 CBC புத்தகங்கள், Badge. (40,000), பாட்டுப் புத்தகங்கள் (15,000), கலர் பென்சில்கள், ஸ்கெட்ச் பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் கொடுக்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 20/– வீதம் 40,000 மாணவர்களுக்கு ரூ. 8 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் மற்றும் ஊழியத்தின் சார்பில் அல்லது சபையின் சார்பிலோ ஒரு மாணவருக்கு **ரூ. 20/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான காணிக்கையை மாணவர்களுக்குக் கொடுத்து இந்தச் சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




கடந்த ஆண்டின் CBC பயிற்சிப் புத்தகங்கள்

*...மிகவும் சிறியவராகிய*
*என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு*
*நீங்கள் எதைச் செய்தீர்களோ,*
*அதை எனக்கே செய்தீர்கள்....*
*- (இயேசு) மத்தேயு 25:40*

## சகோதரி. A. உஷா தேவி, & சகோதரி. ஸ்நானகி (ஆறுமுகநேரி)
### ஆகியோரின் பணித்தள பார்வை அறிக்கை



கலாச்சார வரவேற்பு



பகிர்வு வேளை



பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் குடும்பத்துடன்



தெல்சர் சபை பெண் விசுவாசிகளுடன்





முண்டத் கிராம சபை கூட்டத்தில்



போரடி கிராம ஆலயத்திற்கு முன்பு



பாரேவா கிராம ஆலயத்திற்கு முன்பு

## சகோதரி. A. உஷா தேவி, & சகோதரி. ஸ்நானகி (ஆறுமுகநேரி)
## *ஆகியோரின் பணித்தள பார்வை அறிக்கை*

கர்த்தரின் சித்தத்தின்படி **நானும், சகோதரி ஸ்நானகி** அவர்களும் ஜனவரி 8 முதல் 11ம் தேதி வரை " **ஷாலோம்** " பணித்தளத்திற்கு சென்று அங்குள்ள மக்களையும், ஆலயங்களையும் பார்க்க கிருபை செய்தார். என் மகன் குழந்தை **"எமிஷா"** (2.1/2 வயது) க்கு நல்ல சுகம் கிடைக்கட்டும் நான் பணித்தளத்திற்கு சென்று அங்குள்ள பீல் மக்களிடம் சாட்சி சொல்லுவேன் என்று பொருத்தனை செய்து இருந்தேன். அதன்படி என்னை சாட்சி சொல்ல வைத்தார். நான் சொல்ல அதை சகோதரி **வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள்.

**ஆலயங்கள் பார்வையிடல் :** குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களிலும் கட்டியுள்ள ஆலயங்களை நாங்கள் பார்வையிட்டோம். அநேக ஆலயங்களை பார்க்க கர்த்தர் கிருபை செய்தார்.

**கலாச்சார வரவேற்பு :** எங்களுக்கு ஆதிவாதி மக்கள், அவர்கள் கலாச்சார முறைப்படி எங்களுக்கு மாலையணிவித்து, சால்வை போட்டு, நினைவுப் பரிசுகள் கொடுத்து எங்களை உபசரித்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அந்த மக்கள் ஆண்கள், பெண்கள் எல்லோரும் கள்ளம், கபடம் இல்லாமல் " **ஜேசு** " என்று சொல்லும் வழக்கம் என் மனதை மிகவும் கவர்ந்தது.

ஷாலோம் பணித்தளத்திற்கு சென்று அங்கு சென்று பார்த்த பின்புதான் இந்த ஊழியம் எவ்வளவு கடினமானது என்பது நன்கு தெரிகிறது. **ஷாலோம் ஊழியம் செல்கின்ற பாதையானது மிகவும் கடினமானது, எவ்வளவு கஷ்டப்பட்டு அந்த ஊழியத்தின் திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.** மேலும் அந்த ஆதிவாசி மக்களை காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து நாமும் மனிதர்கள்தான், மிருகங்கள் அல்ல என்ற நிலைக்கு கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும் போது அது லேசான காரியம் அல்ல. **"தேவன் வழிநடத்துதல் இல்லாமல் இந்தக் காரியங்களை யாராலும் செய்ய முடியாது. "** இதை எங்களால் திட்டவட்டமாக சொல்ல முடியும். மேலும், ஆதிவாசி மக்கள் ஆலயத்தில் ஜெபம் பண்ணுவதைப் பார்க்கும் போது எங்கள் உடம்பு சிலிர்க்கின்றது.

**எல்லா ஜனங்களும் பரிசுத்த ஆவியால் நிறைந்து, அபிஷேகம் பெற்று, ஆடிப்பாடி தேவனை மகிமைப்படுத்தும் போது எங்களுக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.** இந்த காட்சியை நாம் எங்கும் பார்க்க முடியாது. இந்த மக்களின் முன்னேற்றத்திற்கு ஷாலோம் ஊழியர்களாகிய **பேராயர் தேவதாஸ்** அவர்களும், அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களும், மற்ற சுதேச ஊழியர்களும் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம்.

மேலும், சமுதாய பணிகளை இந்த ஷாலோம் ஊழியங்கள், ஆதிவாசி மக்களுக்கு செய்து வருகிறார்கள். **சகோதரி வஹிதா தேவதாஸ்** என்னோடு படித்த உடன்தோழி ஆவார். தற்போது கர்த்தர் அவர்களை ஷாலோம் ஊழியத்தில் நடத்தி வருகிற ஆசீர்வாதத்தைக் காணும்போது எனக்கு வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது. **தேவனுக்கே மகிமைக!**

25 வது ஆண்டில்

# ஷாலோம் ஊழிய வெள்ளிவிழா ஆண்டு

## சிறப்பு பணிகளும் திட்டங்களும்

தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 580 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.


சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

### ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். (Shalom Bhavan, Dahod - Gujarat)

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.



ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- பீல் மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் 24 மணி நேரமும் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- Sponsor Related Department. ❖ Car & Two Wheeler Parking வசதி.
- பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகலில் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம்,
பிஜல்பூர், இராஜஸ்தான்.

**மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது**

- ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)
- ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து **"ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி"** என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**"…..எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 30

**பதில் எழுதுக :**

(குறிப்பு : விடைகளை யோசுவா, நியாயாதிபதிகள் புஸ்தகத்திலிருந்து கண்டு பிடிக்கவும்)

1. சுதந்திரம் கொடுக்கப்படாத இஸ்ரவேலின் கோத்திரம் எது?
2. எதினால் மனோவிசாரங்கள் யாருக்கு மிகுதியாயிருந்தன?
3. எந்த இடத்திலிருந்து கானான் தேசத்திற்கு வேவு பார்க்க யோசுவா மனிதரை அனுப்பினான்?
4. எந்நாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது?
5. கிதியோனின் வேலைக்காரன் யார்?
6. ஆகானின் அனைத்தையும் கல்லெறிந்து அக்கினியால் சுட்டெரிக்கும் போது யாரை மட்டும் ஆகானின் குடும்பப் பட்டியலில் சொல்லப்படவில்லை.
7. பெரும் பாதைகள் யாருடைய நாட்களில் பாழாய் கிடந்தன?
8. காலேப் தன் மகளை யாருக்கு எதினால் விவாகம் பண்ணிக் கொடுத்தான்?
9. திராட்சத் தோட்டங்களில் பதிவிருந்து தங்களுக்கு பென்யமீனின் புத்திரர் யாருடைய குமாரத்திகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும்?
10. யாரைக் குளவிகள் துரத்தின?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.03.2016**

**கடந்த பிப்ரவரி மாத வேத வினா போட்டி எண் 29க்கான சரியான விடைகள்**

1. எகிப்தியனின் தேசத்திலே பரதேசியாய் இருந்ததால். உபா. 23 : 7
2. தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப். யாத். 38 : 23
3. பேயோரின் சந்ததியிலே பிலேயாம். எண். 31 : 16
4. கிப்ரோத் அத்தாவா. எண். 11 : 34
5. அர்கோப் தேசம். உபா. 3 : 4
6. செலோப்பியாத்தின் குமாரத்திகள். எண். 27 : 7
7. சோதோமையும், கொமோராவையும், அத்மாவையும், செபோயீமையும் கவிழ்த்துப்போட்டார். உபா. 29:23
8. ஏசா. ஆதி. 36 : 9
9. நூனின் குமாரன் யோசுவா. எண். 27 :18,20
10. நப்தலி. ஆதி. 49 : 21

**கடந்த பிப்ரவரி மாத வேத வினாப் போட்டி எண் 29 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 21 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. சாந்தி ராஜன்,** பாளையங்கோட்டை. **2. Sis. செலின் ராணி டேவிட்,** கோயம்புத்தூர்
**3. Sis. செல்வி ஜாண்ரோஸ்,** நாகர்கோவில்

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை **9345675468 –** என்ற மொபைல் எண்ணிற்கு **SMS** மூலமாகவோ **Whats App** மூலமாகவோ அனுப்பலாம் அல்லது **info@shalommission.in** என்ற ஈ–மெயிலிலும் அனுப்பலாம்.

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9345675468

## உங்கள் ஜெப உதவிக்கு
## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>M.T.N. Building, North Street,<br>Near Women's Police Station,<br>Marthandam, K.K. Dist. - 629165<br>Cell : 9487689869, 9659644500 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Jacob. N.**<br>Bathani Bhavan,<br>Room No. 11, First Floor,<br>R. No. 2, Gate No. 6,<br>Malvani, Malad West,<br>Mumbai - 400095<br>Cell : 09819554974 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522, 9698444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

சுய சிதைவை நோக்கி மனித இனம் செல்கிறது என பேராசிரியர் ஸ்டீபன் ஹாக்கிங் எச்சரித்துள்ளார். அணு ஆயுதப் போர், புவி வெப்பமாதல் மற்றும் மரபணு மாற்றி அமைக்கப்பட்ட வைரஸ்கள் ஆகிய மூன்று காரணிகளை அவர் குறிப்பான ஆபத்துகளாக சுட்டிக் காட்டியுள்ளார். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய எதிர்கால முன்னேற்றங்கள் மற்றும் நிகழ்வுகள் தவறாகப் போவதற்கான புதிய வழிகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் காஷ்மீரில் உள்ள சியாச்சின் பனிச் சிகரத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 10 இந்திய இராணுவ வீரர்கள் பலியாயினர். உலகின் மிக உயரமான போர்க்களம் என்று வர்ணிக்கப்படும் சியாச்சினில் இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் படையினரும் தொடர்ந்து காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் வேலூர் மாவட்டம் நாட்ராம்பள்ளி வட்டத்திலுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் விண்கல் ஒன்று விழுந்ததில் அக் கல்லூரியின் பேருந்து ஓட்டுனர் ஒருவர் பலியானார். அசாதாரணமான வகையில் ஏற்பட்ட இந்த விபத்தினால் மேலும் மூவர் காயமடைந்தனர். அந்தக் குறிப்பிட்ட கல்லூரியின் வளாகத்தில் மர்ம பொருள் ஒன்று விழுந்ததாகவும், அது அதிக சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாகவும், அதன் காரணமாக அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் சேதமடைந்ததாகவும் கல்லூரி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலகிலேயே முதன்முறையாக ஜிகா வைரஸ் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தை கண்டுபிடித்திருப்பதாக ஹைதராபாத்தைச் சேர்ந்த மருந்து உற்பத்தி தெரிவித்துள்ளது. தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா நாடுகளில் இந்த ஜிகா வைரஸ் பரவி வருகிறது. பிரேசிலில் 3530 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, ஜிகா வைரஸ் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கு பிறந்த குழந்தைகளில் தலை சிறுத்துக் காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஜிகா வைரஸ் உலகம் முழுவதும் 40 லட்சம் பேரைத் தாக்கும் ஆபத்து உள்ளது என எச்சரித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



# ஷாலோம் கிராம ஆலயம்
# டோபேனோ
## குஜராத்

டோபேனோ என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்தில் தான்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமம் மலைப்பாங்கான இடத்தில் உள்ளது. இக்கிராமத்திற்கு போக்குவரத்து வசதி கிடையாது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் மந்திரவாதிகளை நம்பி மந்திர பூஜைகள் செய்து வாழ்பவர்கள். மேலும் திருடுவதை தொழிலாகக் கொண்டவர்கள். இந்த சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தவர்தான் சகோ. சோமா ஹட்டிலா. இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு முன்பாக சாராயம் மற்றும் பீடி குடிப்பது, தம்பாக்கு போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இந்நிலையில் இவருடைய தாயார் பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, அதினிமித்தம் ஏற்பட்ட வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் கிரியைகள் செய்தும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

மிகவும் சோர்ந்து போன நிலையில், இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு, பாட்டன்புரா கிராமத்திலுள்ள ஷாலோம் சபைக்கு தனது தாயை அழைத்துச் சென்றார். அங்கு போதகர். மங்கு புரியா அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி, இவரது தாயாருக்காக ஜெபித்தபோது, தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்ததோடு, நோய்களிலிருந்தும் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு சகோ. சோமா ஹட்டிலா அவர்களுடைய வீட்டில் போதகர். மங்கு புரியா அவர்கள் வந்து கூட்டம் நடத்த ஆரம்பித்தார். கிராமத்தில் உள்ள பூஜாரிகள் கூட்டம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் கிறிஸ்தவர்கள் எங்கள் கிராமத்தில் வரக்கூடாது என்று மிகவும் எதிர்த்தனர்.

அதனால் சோமா ஹட்டிலா 2004–ம் ஆண்டில் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, கூட்டத்தைப் பொறுப்பேற்று நடத்த ஆரம்பித்தார். சபையின் விசுவாசிகளும் மூப்பர்களும் சோர்ந்து போகாமல் உபவாசித்து ஜெபித்ததின் மூலமாகவும் தேவன் சபையில் செய்யும் அற்புதங்கள் மூலமாகவும், விரோதங்கள் மாறி சபை வளர்ந்து பெருகியது. தற்போது 40 குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர். சோமா ஹட்டிலா அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தற்போது புதிய ஆலயம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக 28–12–2015 அன்று பேராயர் தேவதாஸ் அவர்கள் பிரதிஷ்டை ஜெபத்தை ஏறெடுக்க, போதகர். Dr. ஜார்ஜ் இராபர்ட் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் **Praise Tower City Church,** Chennai ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



மாணவியின் பெயர் : **எஸ்தர் எத்தர்சிங் டாமோர்**

தந்தையின் பெயர் : எத்தர்சிங் டாமோர்

தாயாரின் பெயர் : நரப்தா டாமோர்

பிறந்த நாள் : 07.05.2004

படிக்கும் வகுப்பு : 6th Std.

சொந்த ஊர் : தாத்கட்

மாவட்டம் & மாநிலம் : தாகோத், குஜராத்

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்** இவளுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தை சேர்ந்தவர். இவர் அந்தகார வாழ்க்கையில் வாழ்ந்து வந்தார். திடீரென இவருடைய சரீரத்தில் கட்டி ஏற்பட்டது. இதிலிருந்து விடுதலை பெற மந்திரம் செய்தும், மருத்துவ சிகிச்சை செய்தும் எவ்வித விடுதலை இல்லை. ஷாலோம் ஊழியர் மூலம் இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டார்.

ஷாலோம் ஊழியர் இவருக்காக ஜெபித்தபோது கட்டி மறைந்தது. இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இயேசுவை தன் சொந்த ஜனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாரம் ஏற்படவே ஊழிய பயிற்சி பெற்று தற்போது தன் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவியைக்குறித்து** எஸ்தருக்கு வேதம் வாசிப்பது, பாடல் பாடுவது மிகவும் விருப்பம். இவளுக்கு 2 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உண்டு.

**ஜெபியுங்கள்** இவளுக்காக, படிப்பிற்காக, சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்யும் ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவியைத் தாங்குபவர்** **Mrs. Jeba Punitha. Chennai.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம்.

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.

Owned and Published by V. Devadass from New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadass